# தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதைகளில் வனப்பேச்சி என்னும் படிமம்

# Vanapechi is an Image in Tamilachi Thangapandian's Poems

**ந. அஜித் குமார்**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*இக்கால இலக்கியத்துறை*
*தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை*

**N. Ajith Kumar**
*Ph.D. Research Scholar (Full Time)*
*Department of Modern Literature*
*School of Tamil Studies*
*Madurai Kamaraj University*
*Madurai*

ஆய்வுச் சுருக்கம்

*நனவடங்கு நிலையில் இட் தளத்தில் உள்ள மனதில் அமுக்கத்திற்கு உள்ளாக்கப்படும் சிந்தனைகள் யாவும் படைப்பாகவும் கனவாகவும் வெளிப்படுகின்றன. தடையில் இயல்பு என்பது போல படைப்பும் படைப்பாளியிடமிருந்து வெளிப்படுகிறது. படிமங்களைப் பயன்படுத்தும் படைப்பாளர்கள் தொல் படிமங்களாக அவற்றை உருவகித்துக் கொள்வதுண்டு. அத்தகைய படிமங்கள் புராணத் தொன்மக் கதைகளில் நேரடியாகவும் நவீனக் கவிதைகளில் தொல்படிமத்தைப் பயன்படுத்தும் வழக்கம் காணப்படுகிறது. ஆனால் நனவடங்கு நிலையின் இச்சைகளை நனவு நிலையில் வெளிப்படுத்தும் போது நனவு மனம் நெறிப்படுத்துவதாக அமைகிறது. எனவே சொற்கள் உயர்நிலையில் வெளிப்படுகின்றன. தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதைகளில் வனப்பேச்சி என்னும் படிமம் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது. சிறுவயது ஏக்கங்களையும், பாலியல் விருப்பங்களையும் படிமங்களாகவே வனப்பேச்சி என்னும் உருவகிக்கப்பட்ட பெண் கொண்டு வெளிப்படுத்து கிறார் என்பதை இக்கட்டுரை அறியத் தருகிறது. உளவியல் அடிப்படையில் படிமம் என்பது தொல் படிமமாகக் கருதப்படுகிறது. தொல் படிமம் என்பது தெய்வங்களாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் பதிந்து போன பழைமையான நினைவுகளில்*

**Abstract**

*All the thoughts that are compressed in the mind at the level of consciousness manifest as creation and dreams. Creation emanates from the Creator, as nature in constraint. Creators who use images embody them as archetypes. Such images are found directly in mythological stories and in modern poetry the practice of using archetypes. But when the desires of the conscious state are expressed in the conscious state, the conscious mind becomes disciplined. So words emerge at a higher level. The form Vanapechi is frequently used in the poems of Tamilachi Thangapandiyan. This article shows that childhood longings and sexual desires are expressed through images by a personified woman named Vanapechi. In psychological terms, an image is considered an archetype. An archetype is a manifestation*

*ஒன்றாக வெளிப்படுவதாகும். அந்த வகையில்தான் வனப்பேச்சி என்னும் படிமம் தமிழச்சி தங்கபாண்டியன் கவிதைகளில் செயல்படுகிறது.*

***குறிப்புச் சொற்கள்:***

*தொல்படிமம்,புராணம்,உயர்நிலைப்படுத்தல், வனப்பேச்சி, பொருட்காட்சி, பாலியல் இச்சை, ஏகலைவன் கட்டைவிரல்*

*of one of the ingrained ancient memories that consider themselves gods. That is how the image of Vanapechi works in Tamilachi Thangapandian's poems.*

***Keywords**:*

*Archetype, Myth, Exaltation, Wild Talk, Exhibition, Lust, Single Thumb*

**Citation**

Kumar, N. Ajith. "Vanapechi Is an Image in Tamilachi Thangapandian's Poems." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 36–43.

*https://doi.org/10.5281/zenodo.20135891*

**முன்னுரை**

*கவிதைகள் என்பவை படைப்பாளனின் தங்கு தடையற்ற பேச்சு என சிக்மண்ட் பிராய்ட் விளக்குவார். அதற்குக் காரணம் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் மூன்று தளங்கள் காணப்படுகின்றன. அதில் இட் என்னும் விழைவு மனத்தில் விருப்பங்கள் அனைத்தும் சேகரமாகும். உளநோய்க் கூறுகள் ஏற்படின் நோய்க்குட்பட்டவரை தடையில் பேச்சு என்னும் முறையில் குணப்படுத்துவது உளவியலில் உள்ள ஒரு மருத்துவ முறையாகும். இத்தகைய மருத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே படைப்பாளிகள் யாவரும் நரம்பு நோய்க் குறி உள்ளவர்கள் என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர் எனவும் கொள்ளலாம். நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து மனதில் தோன்றுவது அனைத்தையும் பேசுவதன் மூலம் குப்பைக் கூடை காலியாவது போல மனமும் சுத்தமாகிறது என்றே இதனைக் கூறுகின்றனர். மனித விருப்பங்கள் அப்பட்டமாக வெளிப்படுத்தத் தக்கனவாக இல்லை. அதனைத் தடுக்கும் வகையில் பண்பாட்டு விழுமியங்கள் இருக்கின்றன. சமூகமும், பெற்றோரும் நாகரிகம், பண்பாடு ஆகியனவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் பேச்சு, செயல் ஆகியனவற்றை கட்டுப்படுத்துகின்றனர். இதனால் இயல்பான வெளிப்பாடு என்பது நிகழாமல் மனதிற்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் நிகழ்கிறது. இதன் அடிப்படையில்தான் மனப் பிறழ்வு ஏற்படுபவர்களிடம் வெளிப்படும் தவறுகள் நோய்க்குறிகளாக இருந்தாலும் அத் தவறான செயல்கள் மூலம் உணர்த்த விரும்பும் கருத்துக்கள் அதில் காணப்படும். அதனை உளப்பகுப்பாய்வு மூலம் அறிந்து கொள்ள முடியும். படைப்பில் வெளிப்படும் மொழியானது உயர்நிலைப்படுத்தப்பட்டு வெளிப்படும். அத்தகைய வெளிப்பாடுகளில் ஒன்றாக அமைவதே படிமம் ஆகும். தன் மன விருப்பத்தை ஒரு படிமத்தின் மூலம் பதிலி செய்து அதன் வழி கருத்துரைப்பதாக அமையும். படைப்பாளி தான் காணும் சமூகத்தின் மீது கூற விரும்பும் கருத்துக்களை பிறிதொருவர் பெயர் கொண்டு வெளிப்படுத்துவதை பத்திரிகை, இலக்கியம் மற்றும் கட்டுரைகளில் காணலாம். வேறு பெயர்களை இடும் போது தான் கூற விரும்பு கருத்திற்கு இசைய குறியீட்டுப் பொருண்மையில் பெயரிட்டுக் கொள்வர். இது போன்ற படிம உற்பத்தியானது புனைவிலக்கியங்கள் சாதாரணமாக காணப்படுவதாகும். எழுத்தாளர்கள் தாம் விரும்பும் உருவை படைப்புகளில் எடுக்கின்றனர். கடவுள் உருக் கொண்டு தம் இச்சை யை, விருப்பத்தை வெளிப்படுத்துவதை பல திரைப்படங்களில் கூட காணமுடிகிறது. இது போன்ற படிமமாக தமிழச்சி தங்கபாண்டியன் கவிதைகளில் வெளிப்படுவது வனப்பேச்சி படிமம் ஆகும். வனப்பேச்சி என்ற கவிதைத் தொகுப்பிலும் வனப்பேச்சியாக உருக் கொண்டு சமூகத்தை, நகரத்தின் இழிவுகளை, பெண் மீதான வக்கிரத்தை சாடுகின்றார். தமிழச்சி என்ற பெயரிலும் பேச்சி என்பதன் சாயை வெளிப்படுவதைக் காணலாம். இக்கட்டுரையில் வனப்பேச்சி படிமத்தின் வழி தன் மனவிருப்பங்களை வெளிப்படுத்தும் படைப்பாளரின் ஆழ்மனதை அறிந்து கொள்ளலாம்.*

**படிமம்**

*இலக்கியங்களில் படிமங்கள் உள்ளுறை இறைச்சி என்பன போல பயன்படுத்தப்படுவனவாகும். படிமங்கள் புதைப்பொருள் ஆராய்ச்சியில் சுட்டப்படும் சொல்லாக இருந்தாலும் இலக்கியத்தில் பயன்படுத்தப்படும் படிமம் என்பது காட்சிப் படுத்துதல் என்னும் பொருளில் அமைவதாகும். உவமை, உருவகம் போல் படிமமும் தெளிவுபடுத்துவதற்காக பிறிதொன்றை உவமைப்படுத்துவதாகும். படிமம் வினை, பயன், மெய் என்பனவற்றினால் அறியத் தக்கதாக அமையும். தமிழில் படிமக் கவிஞர்கள் எனப் பலர்*

*இருக்கின்றனர். அவர்கள் தம் கவிதைகளில் படிமத்தைப் பயன்படுத்தியிருப்பர். மூலமாதிரிப் படிமங்கள் பற்றி யுங் முன் வைத்த கொள்கை மனிதயினம் அனைத்திற்கும் பொதுவான குறியீட்டுச் சிந்தனையை விளக்குகிறது (அப்துல் ரகுமான், 2015) என்று படிமங்கள் மனிதனின் உள்ளத்தில் பதிவாகி விடுவதைப் பற்றிக் கூறப்படுகிறது. உளவியலில் மூலப் படிமமாக விளங்கக் கூடியவை என தெய்வங்கள் குறிக்கப்படுகின்றன. பண்டைய புராண இதிகாசங்களில் இருந்து நவீனம் வரையிலான அனைத்து இலக்கியங்களும் அமைப்பில் மூலப் படிம மாதிரிகளே என்பது யூங்கிய இலக்கிய உளவியல் கோட்பாடாகும். அதாவது மூலப்படிவ ஆதிக்கம் புராணத்தில் இருந்தது போல் நவீனத்திலும் இருக்கிறது. புராணத்தில் அப்பட்டமாகத் தெரிந்த மூலப் படிமங்கள் நவீனத்தில் உள்ளுறையாக உள்ளன (தி.கு.இரவிச்சந்திரன், 2017) என்று குறிப்பிடுவதிலிருந்து மூலப் படிமமாக தெய்வங்கள் உள்ளுறையாக வெளிப்படும் என்கபது அறியப்படுகிறது. நவீன இலக்கியங்களில் கனவு, படைபபு என்பன சமன்படும் வகையில் வெளிப்படுவனவாகும். ஆனால் தமிழச்சி தங்கபாண்டியன் தன்னை ஒரு படிமமமாக கவிதைகளில் உலவ விட்டிருப்பார். அப்படிமமே வனப்பேச்சியாக அவருடைய கவிதையெங்கு வியாப்பித்து விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. நகுலனின் சுசீலா போலவும் கலாப்ரியாவின் சசி போலவும் தமிழச்சியின் வனப்பேச்சி பல அர்த்தங்களை ஒருங்கிணைத்த அதீத ஆற்றலுள்ள உருவமாகிறாள். (தமிழச்சி தங்கபாண்டியன், 2009) என்று தமிழவன் மஞ்சணத்தி என்னும் கவிதைத் தொகுப்பிற்கான அணிந்துரையில் குறிப்பிடுகிறார். அவர் வனப்பேச்சி என்பதை படிமமாகவே பயன்படுத்தியுள்ளார் என விளக்குகிறார். மஞ்சணத்தி என்னும் மரமும் ஒரு வனப்பேச்சியாகவே உருக் கொள்வதாக கூறுகிறார். ஆசிரியர் தம் மனத்தில் தன்னை மூலப்படிமமாகக் கருதிக் கொள்வது நடைபெறுகிறது. பகுத்தறிவு மிகுதியாக செயல்படும் படைப்பில் மூலப்படிமத்தை தன் விருப்பார்வங்களை வெளிப்படுத்த பயன்படுத்துகின்றனர் எனக் காணமுடிகிறது. அவ்வாறுதான் தமிழச்சி தங்கபாண்டியனின் தன்னை வனப்பேச்சி என்னும் மூலப் படிமமாகக் கருதிக் கொண்டு கவிதைகளில் சமூக சாடல்களை முன்வைக்கிறார்.*

**நகர் பற்றி வனப்பேச்சி**

*தமிழச்சியின் உள்மன ஆழத்தில் புதைந்து கிடப்பனவற்றை அகழ்ந்தால் கிராமத்து மண்ணிலிருந்து மரம், செடி, கொடி, குளம், வாய்க்கால், மீன், தூண்டில், கிணறு, வரப்பு எனக் கிளைத்துப் பெருகும். அந்த அளவிற்கு வனப்பேச்சி என்னும் படிமத்தின் மூலம் நகரத்தின் மீதான தன் வெறுப்பை வெளிப்படுத்துகிறார் வனப்பேச்சி நகருக்குச் செல்கிறாள் எதற்காகவென்றால் நகரம் பற்றி பலரும் பெரிதாக பேசுவதைக் கண்டு அதன் பொருட்டு செல்கிறாள் அவ்வாறு சென்றவள் நகரத்தின் நானாவித இடர்களைக் கண்டு பொருமுகிறாள் என்று குறிப்பிடுகிறார். பெருநகர்ப் பகுதி என்று தலைப்பிட்ட கவிதையானது வனப்பேச்சி பழங்கால கொண்டை ஊசி வாங்க விரும்புகிறாள் என்பது நவீனத்தின் மாற்றங்கள் குறித்த ஒவ்வாமையை குறிப்பதாக அமைகிறது.*

***கைப்பிடியற்ற தானியங்கிக் கதவுகள்***
***காட்டுப் பூவின் சீம்பால்***
***கவுச்சியுடன் இருந்த அவளைக்***
***கண்கள் அகல தாபமுடன் உள் வாங்கின***
***நேற்று வரை பிம்பங்களின் தேமலில்***

***களை இழந்திருந்த கடைக் கண்ணாடிகள்***
***ஒப்பனையற்ற அவளது கறுத்த***
***தேகத்தின் ரசவாதத்தில்***
***அக்கணம் தம்மை நேர் திருத்திக் கொண்டன (தமிழச்சி தங்கபாண்டியன், 2009)***

*என்னும் கவிதையானது உளவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படும் போது வனப்பேச்சி என்னும் படிமம் நனவடங்கு நிலையில் அமுக்கப்பட்ட விழைவாகக் காணப்படுகிறது. அமுக்கப்பட்ட விருப்பமானது நாகரிகம் பண்பாடு ஆகியனவற்றால் உயர்நிலைப்படுத்தப்படும் சொற்களால் வெளிப்படுத்தப்படும். ஆனால் அவை அடிப்படையில் விழைவு மனத்தின் வெளிப்பாடுகளாகும். வனப்பேச்சியின் இயல்பானது காட்டுப் பூவின் சீம்பால் வாசம் அடிக்கக் கூடியது என்று அதன் அப்பட்டமான இயல்பு கூறப்படுகிறது. விழைவு மனத்தின் வெளிப்பாடென இதனைக் கொள்ளலாம். ஒப்பனையற்ற அவளது கறுத்த தேகம் என்பதும் ஆழ்மன விருப்பத்தினை அப்படியே வெளிப்படுத்துவதாகும். வனப்பேச்சி எனத் தன்னை உருமாற்றிக் கொள்ளும் விதமும் இதில் வெளிப்படுகிறது. பாலுணர்வுகளே பெரும்பாலும் உயர்நிலைப்படுத்தப்படும் சொற்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. நாகரிகம் என்பது பாலியல் உணர்வுகளை மட்டுப்படுத்தி விடுவதால் அது பண்பட்ட சொற்களாலேயே வெளிப்படுத்தத் தக்கனவாக படைப்புகளில் வெளிப்படும். கனவுகளில் நனவடங்கு மனம் நேரடியாக செயல்படுவது போல படைப்பில் செயல்படுவதில்லை எனவேதான் உயர்நிலைப்படுத்தப்பட்ட சொற்களால் நாகரிகத்தின் தன்மையை விமர்சிக்கிறார். இது ஒருபெண்ணின் ஆழ்மன பாலியல் விருப்பத்தினை வெளிப்படுத்துவதாகும். அதற்கு வனப்பேச்சி என்னும் தொல் படிமம் ஆசிரியருக்குப் பயன்படுகிறது.*

***அதுவரையிலும்***
***மனிதத் தொடுகை அற்று***
***குதிகால் உயரக் காலணித் தழும்புகளில்***
***மரத்திருந்த***
***கான்கிரீட் படிக்கட்டுக்கள்***
***செருப்புகளற்ற அவளின் அழுக்குப்***
***பாதங்களைக் காமுற்றுத் தழுவின***
***பிளாஸ்டிக் கழிவுகளில் வெதும்பியிருந்த***
***குப்பைத் தொட்டியிலோ***
***தம் முயல் வடிவக் காதுகளை***
***விடைத்துக் கொண்டு***
***விரகத்துடன் உள்ளிழுத்தன***
***அவளது காய்ந்த பொடிமட்டை***
***நாற்றத்தை (தமிழச்சி தங்கபாண்டியன், 2009)***

*என்ற கவிதை வரிகள் ஆழ்மனத்தின் பாலியல் விருப்பங்களை நேரடியாக ஆனால் நாகரிகமான மொழியில் கடத்தப்படும் உத்தியில் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆழ்மனத்தில் பாலியல் விருப்பங்கள் தேக்கமுறுகின்றன. சிறு குழந்தையாக இருக்கும் போதே பாலியல் அமுக்கத்திற்கு ஆளாகிற உள்ளத்தில் சேகரமாகின்ற குப்பை போல்தான் பாலியல் விருப்பங்கள் ஆகும். அவற்றை வனப்பேச்சியாகத் தன்னை உருமாற்றிக் கொண்டு நாகரிக உலகம் தன் இயல்புகளை வெளிப்படுத்த விடாமல் தடுப்பதையும், விடைத்துக் கொண்டு*

*இருக்கும் காதுகளைக் கொண்ட முயல் வடிவ குப்பைத் தொட்டியை பதிலீடு செய்து காமுறும் விரக தாபத்தை வனப்பேச்சியின் வடிவில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். அனைத்து உயிரினங்களுக்கும் பால் இச்சை என்பது இயல்பானதுதான். ஆனால் மனிதர்கள் மட்டுமே மட்டுப்படுத்தும் பண்பாட்டு வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய பண்பாட்டு வழக்கத்தை வனப்பேச்சியின் படிமம் கொண்டு நிராகரித்து வெளியேற்றும் மனப்பான்மையைக் கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.*

**பாலிச்சையின் விழைவு மன வெளிப்பாடு**

*வனப்பேச்சியின் கையில் பொடி மட்டையின் நாற்றமடிக்கும் என்று கவிதை வரிகளில் குறிப்பிடுகிறார். பொடி மட்டை என்னும் உருவகமும் பாலியல் இச்சையின் வெளிப்பாடு எனக் கொள்ளமுடிகிறது. பாலைத் திணையின் இருத்தல் பிரிவின் துயரைக் கூறுவது போல தன் துயரைக் கூறுகிறார் ஆசிரியர் அதற்கு வனப்பேச்சியின் உருவகம் பயன்படுகிறது,*

***அவளின் சுருங்கிக் கிடக்கும்***
***அடுத்த விரல்***
***முன்தள்ளி முன்னேறத் தயங்கிச்***
***சுருண்டிருக்கும் என் முழங்கைகளை***
***நீவி நெட்டுயிர்க்கும்***
***அவளது தேமல் படர்ந்த***
***வலது கை விரல்கள் அய்ந்தும்***
***குனிதல் அற்ற உயரம் வேண்டிக்***
***காயம்பட்ட என்***
***குதிகால்களைச் சேர்ந்தணைக்கும்***
***அவள் பத்து விரல் தாய்மை***
***ஆற்றுபடுத்துதலின்***
***சூட்சுமங்கள் பிடாரிக்கு***
***பிடிபட்ட தெப்படி என்றதற்கு***
***அன்பைச் சொரியும்***
***அப்பாவின் அகராதி***
***ஒன்றைக் கருவேல மரப்***
***பிசின் இடுக்கில்***
***களவெடுத்ததாய் என்***
***கனவில் வந்து கெக்கலித்தாள் பேச்சி*** ***(தமிழச்சி தங்கபாண்டியன், 2009)***

*என்ற கவிதையில் கனவும் சேர்ந்து வருகிறது. கருவேல மரப் பிசின் என்ற உருவகமும் பாலிச்சையின்பாற்பட்டதேயாகும். பேச்சி கெக்கலித்தாள் என்பது விருப்ப நிறைவேற்றம் எனக் கொள்ளத்தக்கதாகும். அப்பாவின் அகராதி ஒன்றை களவெடுத்தல் என்பது பாலை நிலத்தின் களவு பற்றியதாக அமைகிறது. அதைக் கனவில் வந்து கூறுவதானது களவின் விருப்பம் மேலெழுந்து வருவதைக் குறிக்கிறது. வனப்பேச்சியின் வடிவில் தன் மன விருப்பங்களையே இதில் கூறுகிறார் எனக் கொள்ள ஏதுவாகிறது. கவிதை வரிகளை உளப்பகுப்புச் செய்யும் போது ஆழ்மன விருப்பங்கள் படிமங்களாக வெளிப்படுகின்றமையைக் காணமுடிகிறது. முன்தள்ளி முன்னேறத் தயங்கிச் சுருண்டிருக்கும் என் முழங்கைகள் என்ற வரிகள்*

*பாலிச்சையின் விருப்ப மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. அவள் பத்து விரல் தாய்மை என்ற சொற்கள் வழி பெண்ணின் பாலிச்சையின் விளைவாக தாய்மை அடைதல் குறிப்பிடப்படுகிறது. கவிதை என்பது நனவு மனத்தின் பார்வையில் செயல்படும் நனவடங்கு மனத்தின் விருப்ப வெளிப்பாடாகக் கொள்ளலாம்.*

***ஏகலைவனது அறுந்த விரலென***
***விழுந்து கிடந்தது கறுத்த பனை***
***தேரிக் காட்டின் வெட்கை குடித்த***
***வெற்றுக் கலயமென அதன்மேல் நான்***
***கள் மணம் ததும்பவும் சுருட்டு நாற்றமுடன்***
***பக்கத்தில் வனப்பேச்சி***
***கொதி மணலின் அனலுக்கு***
***முந்திச் சீலை விரித்து அருகாக சீலைக்காரி***
***முழங்கை வரை சாறொழுகப்***
***பனம்பழத்தை ருதிசத்தபடி ராக்காச்சி***
***அடங்காத சிரிப்புடன் கன்னிமார் ஏழுபேரும் (தமிழச்சி தங்கபாண்டியன், 2011)***

*என்ற கவிதையிலும் வனப்பேச்சி மேல் சுருட்டு நாற்றமடிக்கும் என்று கூறப்படுகிறது. ஆண்கள் பயன்படுத்தும் புகையிலை பெண்மேல் நாற்றமடிக்கும் என்று கூறுவதானது ஒடிபஸ் சிக்கல் குறித்ததாக அமைகிறது. ஆண் மீதான பாலிச்சையை வெளிப்படுத்துவதாகவும் நனவடங்கு நிலையினையும் எடுத்துரைக்கிறது. ஏகலைவனின் விரல் என்பது காணிக்கையாகப் பெறப்பட்ட ஆண் தன் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையிலான விரல் பற்றியது. ஆணின் ஆற்றல் குறித்த சொல்லாடல் ஆண்மை என்றே கூறப்படுகிறது. அதிலும் பாலியல் செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே அவ்வாறு கூறுவது வழக்கமாகும். பாலிச்சையின் விருப்பார்வமாக கட்டை விரல் பற்றிக் கூறப்படுகிறது. அது போல வெற்றுக் கலயம் என்ற சொல்லாடல் பெண்ணினைக் குறித்து நிற்கிறது. வெட்கை குடித்த வெற்றுக் கலயம் என்பது பாலியல் செயல்பாட்டினைக் குறிப்பதாகும். இவ்வாறு வனப்பேச்சி என்னும் படிமத்தின் மூலம் தன் விழைவு மன விருப்பத்தை வெளிப்படுத்தும் விதம் கூறப்படுகிறது.*

*வனப்பேச்சி என்னும் கவிதைத் தொகுப்பில் வனப்பேச்சி ஒரு உருவாக நடமாட விட்டுள்ளார்.*

***ஆவலாதிகளைக் கேட்டு***
***அலுத்துவிட்ட வனப்பேச்சியை***
***மாறுதலுக்காகக் கூட்டிப் போனேன்***
***விருதுநகர் பொருட்காட்சிக்கு***
***குதிரை ராட்டினமும் மிட்டாய்க் கடிகாரமும்***
***ஓலைப்பெட்டித் தீம்பண்டமும் மட்டுமே***
***அறிந்திருந்த அவளுக்கு***
***அது பெரும் பிரமிப்பு***
***காதுவரை கண்களை இழுத்துக்***
***கடைவாய் எச்சில் ஒழுக நின்றாள் (தமிழச்சி தங்கபாண்டியன், 2017)***

*என்ற கவிதை வரிகளில் வனப்பேச்சியின் உருவத்தில் தன்னை முன்னிறுத்தி தன் சிறுவயது நினைவுகளால் ஆன தன் ஆழ்மன விருப்பங்களை வெளிப்படுத்துகிறார் என்பதை உணர முடிகிறது. சிறுவயது நினைவுகள் மேலெழும்புவதற்கானத் தேவையை வனப்பேச்சியை அழைத்துச் செல்வதன் மூலம்தானே ஏற்படுத்திக் கொள்கிறார். தான் காணவேண்டிய பொருட்காட்சியை வனப்பேச்சிக்கு காட்டுவதாகக் கூறி செல்கிறார். இவ்வாறுதான் தனக்கு வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக பக்கத்து இலைக்கு உணவு பரிமாறக் கூறும் நாகரிகமான செயல்பாட்டை நிகழ்த்துகிறார் கவிஞர்.*

**முடிவுரை**

*பண்பாட்டு, நாகரிக வாழ்வில் நேரடியாகக் கூற முடியாதவாறு கட்டிறுக்கமான சூழல் நிலவும் போது விழைவுகள் நனவடங்கு மனத்தில் சேமிக்கப்படுகின்றன. அல்லது அவை குப்பை போல மனத்தை அழுத்துகின்றன. அவற்றை வெளியேற்றும் ஒரு செயல்பாட்டினை உளவியலில் தடையில் இயல்பு என்று கூறுவர். அத்தகைய ஒன்றாக கனவு, படைப்பு இரண்டும் கூறப்படுகின்றன. படைப்புகளில் படிமங்களை பல்வேறு வகையில் பயன்படுத்துவது படைப்பாளரின் வழக்கமாகக் காணப்படுகிறது. தன்னை உருவகித்துக் கொள்ளுதல் புராணத் தொல்படிமத்தோடு தன்னை உருவேற்றிக் கொண்டு நனவடங்கு நிலையின் மன இச்சைகளை வெளிப்படுத்துவது வழக்கம் ஆகும். அத்தகைய படிமமாக தமிழச்சி தங்கபாண்டியன் கவிதைகளில் வனப்பேச்சி என்னும் பெயர் பயன்படுத்தப்படுகிறது. வனப்பேச்சி என்பது குலதெய்வமாகும். இதனை தன் இச்சைகளை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர் பயன்படுத்துவதை அவரது பல்வேறு கவிதைகள் உணர்த்துகின்றன.*

**துணைநூற்பட்டியல்**


1. *அப்துல் ரகுமான், (2006), புதுக்கவிதையில் குறியீடு, அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.*
2. *தி.கு.இரவிச்சந்திரன், (2017), புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுப்பு ஆய்வும், அலைகள் வெளியீடு, சென்னை.*
3. *தமிழச்சி தங்கபாண்டியன், (2009), மஞ்சணத்தி, உயிர்மை வெளியீடு, அபிராமபுரம், சென்னை.*
4. *தமிழச்சி தங்கபாண்டியன், (2017), வனப்பேச்சி, உயிர்மை வெளியீடு, அபிராமபுரம், சென்னை.*
5. *தமிழச்சி தங்கபாண்டியன், (2011), அருகன், உயிர்மை வெளியீடு, அபிராமபுரம் சென்னை.*


## References


1. *Abdul Rahman, (2006), Index in Pudukavitha, Annam Publications, Thanjavur.*
2. *D.K. Ravichandran, (2017), The Innovator's Dream and Psychoanalysis, Waves Publishing, Chennai.*
3. *Tamilachi Thangapandian, (2009), Manjanathi, Vitality Publication, Abhiramapuram, Chennai.*
4. *Tamilachi Thangapandian, (2017), Vanappechi, Biome Publication, Abramapuram, Chennai.*
5. *Tamilachi Thangapandian, (2011), Arukan, Vitality Publication, hiramapuram Chennai.*